இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 330 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 26 – வியாழக்கிழமை 10 ஜூலை 2025 – மதுரை 16+12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 330 : Thiruvalluvar Year - 2056 - Aani 26 - Thursday 10 July 2025 - Madurai 16+12 Pages ₹ 5.00

## இன்று புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் முடிவுற்றத் திட்டங்களை திறந்து வைத்தும் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

# திருவாரூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் களஆய்வு!

## முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்!



**திருவாரூர், ஜூலை 10-**

**மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சொந்த மாவட்டமான திருவாரூருக்கு தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு முறைப் பயணமாக நேற்று வருகை தந்தார். முதல்வர் அவர்கள், நலத்திட்டப் பணிகளின் கள ஆய்வுகளையும், கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையையும் நேற்று திறந்து வைத்தார். இதில் அரசு கட்டிடங்கள் திறப்பு விழா, பொது மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் விழா பேருரையாற்றுகிறார்.**

இந்திய துணைக்கண்டம் மட்டுமின்றி உலக நாடுகளே போற்றும் உன்னத ஆட்சி தந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (09.07.2025) திருவாரூர் மாவட்டம் வருகைத் தந்தார். நேற்று பிற்பகல் திருவாரூர் வந்தடைந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் கோட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு மரியாதை செலுத்தி, திருவாரூர் பகுதிகளில் “ரோட்ஷோ” மூலம் பொதுமக்களைச் சந்தித்தார்.

திருவாரூரை உலக அரங்கில் அடையாளப் படுத்தி, காட்டூரில் கலைஞர் கோட்டமாக உயர்ந்து நிற்கும் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு திருவாரூரில் திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

### கம்பீரமான கலைஞர் சிலை!

திருவாரூருக்கு மட்டுமல்ல; முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலை, அதன் அமைப்பால், சுற்றி எழுப்பப்படும் மணி மண்டபத்தால், உயர்ந்தோங்கி நிற்கும் கம்பீரத்தால், உலகிற்கு திருவாரூரை அடையாளப்படுத்திய கலைஞர் அவர்களின் சிலையானது, ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கே அடையாளமாக உயர்ந்து நிற்கப்போகும் அந்த பிரமாண்ட சிலையினை, திராவிட நாயகர், முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (09.07.2025) திறந்து வைத்தார்.

இன்று (10.7.2025) நடை பெறும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கும் முதல்வர் அவர்கள் பல்வேறு முடிவடைந்த அரசு கட்டிடங்களை திறந்து வைத்து பின்னர் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரையாற்றுகிறார்.

விழாவில் கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என். நேரு, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களும், அரசு அதிகாரிகளும், தலைமைக் கழக நிர்வாகிகளும், மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட மாவட்டச் செயலாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகளும் பெருந்திரளாக பங்கேற்கின்றனர்.

